ResearchGate

See discussions, stats, and author profiles for this publication at: https://www.researchgate.net/publication/322223833

# □□□□□□□□□□□ □□□□□□□□□□ □□□□ □□□□□□□□□ □□□□□ □□□□□□□□ □□□□□□□□□□: □□□□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□□□ □□□□ □□□□□□ □□□□□ (Da'wah of Female Students and Cha....

**Conference Paper** · January 2018

CITATIONS
0

READS
180

**4 authors**, including:



Jazeel M.I.M.
South Eastern University of Sri Lanka
**40** PUBLICATIONS **13** CITATIONS

SEE PROFILE

**Some of the authors of this publication are also working on these related projects:**

Project 7th International Symposium 2017 (IntSym2017)- SEUSL - 07th & 08th December 2017 View project

All content following this page was uploaded by Jazeel M.I.M. on 03 January 2018.

The user has requested enhancement of the downloaded file.

# பல்கலைக்கழக மாணவியரின் த∴வா ஈடுபாடும் எதிர் நோக்கும் சவால்களும்: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நிலை பற்றிய ஆய்வு

**எம்.ஐ.எம். ஜெஸீல்[1], ஏ.எச். நஸ்மியா, எம்.ஜெ.எப். ருக்கையா, யூ.எப். தீஷான்[2]**

[1]இஸ்லாமிய கற்கைகள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
[2] பட்டதாரி மாணவர், இஸ்லாமிய கற்கைகள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*jazeelmi@seu.ac.lk* , *nasmiyahameed@gmail.com* , *fathimarukaiyajaleel@gmail.com* , *dheeshan766@gmail.com*

**ஆய்வு சுருக்கம்**

*த∴வா எனும் எண்ணக்கரு இஸ்லாத்தில் முக்கியமானதாகும். முஸ்லிம் தனது நிலை, நிலமைகளுக்கு ஏற்ப த∴வாவை முன்னெடுக்க வேண்டியவனாவான். இந்த வகையில் தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவியர்களின் த∴வாப் பணியின் ஈடுபாடு அதனை மேற்கொள்ள அவர்கள் கையாளும் வழிமுறைகளை கண்டறிவதையும் அப்பணியில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காண்பதனையும் இவ்வாய்வு பிரதான குறிக்கோளாக கொண்டுள்ளது. அளவு ரீதியிலான இவ்வாய்வு தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் மூன்றாம் வருட விடுதி மாணவியர்கள் மத்தியில் எழுமாறக தெரிவு செய்யப்பட்ட 79 பேரிடம் வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளில் பகுப்பாய்வு அடிப்படையிலானது. மாணவியர்கள் பொதுவாக த∴வாவில் சாதாரணமான ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் கொண்டுள்ளனர். பாரம்பரிய ரீதியிலான த∴வா அணுகுமுறைகளிலேயே பெரிதும் தங்கியுள்ள அவர்கள் குழு, கூட்டுச் செயற்பாடுகளை விட தனிப்பட்ட ரீதியிலேயே த∴வாப் பணியில் ஈடுபடுகின்றனர். உயர் கல்விச் சூழல் அமைவு ஒன்றில் பட்டதாரி மாணவர்கள் என்ற வகையில் அறிவார்ந்த, ஆர்க்கபூர்வமான, திறன்கள் சார்பான த∴வா முறைகளை அவர்கள் பின்பற்றுவது ஒப்பீட்டு ரீதியில் குறைவானது என்பன இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும். உயர்கலா நிலயமொன்றில் த∴வாக்கான திட்டமிடலை மேற்கொள்வோருக்கு இவ்வாய்வு அடிப்படை கருத்தாக்கங்களை வழங்கவல்லது.*

***திறவுச் சொற்கள்:*** த∴வா வழிமுறைகள், மாணவியர் த∴வா, தென்கிழக்குப்பல்கலைக் கழகம்

## 1. ஆய்வுப் பின்னணி

இஸ்லாம் கோட்பாடு, வழிபாடு என்பனவற்றை மட்டும் கொண்ட மார்க்கமாக மாத்திரமன்றி அது வாழ்க்கைக்கான வழியுமாகும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் வழிகாட்டுதலை இஸ்லாம் கொண்டுள்ளது. அடிப்படையில் த∴வா என்பது மனிதனை அவனது இயல்பு நிலைக்கு அழைத்தலாகும். விரும்புதல், கூவி அழைத்தல், அழைப்பு விடுத்தல், போன்ற பதப் பொருள்களினைக் கொண்ட த∴வா எனும் அரபு மொழிப் பிரயோகம் மானுட சமுகத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருதலுக்கான முனைவு அல்லது பணியை முன்னெடுத்தலைக் குறிக்கிறது(Poston, 1993; Solihin, 2008). இறைத்தூதர்களின் பிரதான பணிகளில் ஒன்றாகக் கொள்ளப்பட்ட த∴வா, முஸ்லிம்கள் அனைவர் மீதான ஒரு பொறுப்பாக



ISBN 978-955-627-120-1

கருதப்படுகின்றது(Solihin, 2008). முழு மனிதனது ஆன்மீக ஈடேற்றம், லௌகீக சௌபாக்கியம், ஒழுக்க மேம்பாடு என்பவற்றை ஏற்படுத்துவதில் தலைமையை நடுநிலை சமுகமான முஸ்லிம் சமுகம் பெற்றுள்ளது(Solihin, 2008).

இஸ்லாமிய வரலாற்றில் பெண்களும் த.்.வாவில் ஈடுபாடு கொண்டிருந்துள்ளனர் என்பதற்கான எடுத்தக் காட்டுக்கள் ஹதீஸ்களிலும் வரலாற்று குறிப்புக்களிலும் காணப்படுகின்றன (Cooke, 2001; Lemu, 2001; شبيب, 2013). பெண்கள் தாம் சார்பான தளங்களில் த.்.வா செயற்பாடுடையவர்களாக இருந்துள்ளனர்(2010 ,القاسم). த.்.வாவில் முஸ்லிம் மற்றும் முஸ்லிம்-அல்லாதோர்கள் ஆகியோர்களுக்கிடையிலானது என இரு பிரதான பரிமாணங்களிலும் பெண்கள் தடத்தை பதித்துள்ளனர். இந்த வகையில் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவியர் இவ்விரு பரிமாணங்களையும் கொண்டதாக த.்.வாவை(Anwar; Arnez, 2009 حبيبةالشيخة ;) முன்னெடுப்பதற்கான வாய்ப்பினை பெற்றுள்ளனர்(Ahmad, 1984). ‘‘மு.்.மினான ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பொறுப்பானவர். அவர்கள் நன்மையை ஏவி தீமையை தடுக்கின்றனர்.’’(அல்-குர்ஆன், 9:71-72) எனும் வாசகம் பெண்கள் இப்பணியில் ஈடுபடுவதற்கான அவசியத்தை உணர்த்துகின்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம் மாணவர்களை சாதாரண பெரும்பான்மையாகக் கொண்டது. ஆயினும் சிங்களம், தமிழ் சமுகத்தை சார்ந்த மாணவர்களும் கனிசமாக உள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் ஆறு பீடங்களிலும் அனுமதிக்கப்படும் மாணவர்களில் மொத்தத்தில் பெண்களே அதிகமானவர்கள். அப்பல்கலைக்கழகம் அது அமைந்துள்ள அம்பாறை மாவட்டம் அல்லாத பிற பிரதேசத்து மாணவர்களுக்கு விடுதி வசதிகளை செய்து கொடுத்துள்ளது. இந்த வகையில் பிரத்தியோகமாக பெண்களுக்கான ஐந்து விடுதிகள் உள்ளன. இவ்விடுதியில் அனைத்து சமூக பிரிவைச் சார்ந்த மாணவியர்களும் தங்கி கல்வியினை தொடர்கின்றனர். இவர்களுள் ஒப்பீட்டளவில் இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழி பீடத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவியரின் எண்ணிக்கை வீதத்தால் கூடியது. இப்பீடத்துக்கு அனுமதிக்கப்படும் முஸ்லிம் மாணவர்கள் இஸ்லாம் வேண்டி நிற்கும் த.்.வா செயற்பாட்டை முன்னெடுப்பதில் காண்பிக்கும் ஆர்வம், த.்.வாக்கான களம், பிரயோகப்படுத்தும் முறைகள், எதிர்நோக்கும் சவால்கள் என்பவற்றை இவ்வாய்வு கண்டறிய விழைகின்றது.

## 2. ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு இரு பிரதான நோக்கங்களை கொண்டது. முதலாவது, மாணவியரின் த.்.வாப் பணியில் ஈடுபாட்டையும் அவர்கள் கையாளும் வழி முறைகளையும் கண்டறிதல். இரண்டாவது த.்.வா பணியை மேற்கொள்ளும் போது அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள், சவால்களை இனங்காணல்.



ISBN 978-955-627-120-1

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடங்களின் ஒன்றான இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் மூன்றாம் வருட விடுதி மாணவியர் மத்தியிலேயே மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகத்தின் இரண்டு விடுதிகளில் வசிக்கும் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 100 முஸ்லிம் மாணவியரிடையே வினாக்கொத்து விநியோகிக்கப்பட்டது. அவற்றுள் 84 வினாக்கொத்துக்கள் மீளப்பெறப்பட்டன. 5 வினாக் கொத்துக்கள் பூரணப்படுத்தப்படாமையினால் நிராகரிக்கப்பட்ட பின்னர் 79 வினாக் கொத்துக்கள் (79%) மூலம் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

### 3.1 வினாக்கொத்து

வினாக்கொத்து மூன்று பகுதியைக் கொண்டது. முதலாம் பகுதி தகவல் அளிப்பவர் அடிப்படை விபரங்களையும், இரண்டாம் பகுதி அவர்களின் த∴வா ஈடுபாட்டையும், முன்றாம் பகுதி த∴வா மேற்கொள்ளும் போது அவர்கள் கண்ட இடர்களையும் மையப்படுத்தியதாகும். பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் மென்பொருள் (SPSS) மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு மொத்தம், வீதம், மாறிகளுக்கிடையிலான தொடர்பு போன்றன கணிக்கப்பட்டன.

## 4. கலந்துரையாடலும் முடிவுகளும்

தகவல் தந்தவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் (59.9%) அரபு மொழித் துறையையும், ஏனையோர்கள்(48.1%) இஸ்லாமிய கற்கைகள் துறையையும் சார்ந்தவர்கள். வினாக் கொத்துக்கு பதிலளித்தவர்களில் சுமார் அரைப் பகுயினர் (50.6%) அரசாங்க பாடசாலையில் கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள். மறுபகுதியினர் (48.1%) அரபுக் கல்லூரியில் கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள். ஆயினும் அரசாங்க பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களில் மிகப் பெரும்பான்மையினர் (77.5%) இஸ்லாமிய கற்கைகள் பிரிவையும் ஏனய வீதத்தினரே (22.5%) அரபு மொழி கற்கைத் துறையைச் சார்ந்தவர்கள். இருந்த போதிலும் அரபுக் கல்லூரியில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களில் மிகப் பெரும்பான்மையினர் அரபுத் துறையையும் (84.2%), சிலரே (15.8%) இஸ்லாமிய கற்கைகள் துறையைச் சார்ந்தவர்கள். வினாக்கொத்துக்கு பதிலளித்தோர் 31 தேர்தல் தொகுதியைச் சார்ந்தவர்கள். அவர்களுள் அதிக பெரும்பான்மையினர் (86.1%) விவாகம் செய்யாதவர்களாக காணப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பதிலளித்த பெண் முஸ்லிம் மாணவியர் த∴வா ஈடுபாட்டை ஏதோ ஒரு வகையில் கொண்டுள்ளனர். ஆயினும் முழுமையான ஈடுபாட்டை வெகு சிலரிடமே (6.3%) உள்ளது. பெரும்பான்மையினர் (53.2%) த∴வாவில் சாதாரணமான ஈடுபாடுடையவர்களாக குறிப்பிடும் அதே வேளை கனிசமானவர்கள் (39.2%) சிறிதளவாக ஈடுபாட்டுடையவர்கள். த∴வாவை முழுமூச்சாக ஈடுபடுவோரில் பெரும்பான்மையினர் (60%) இஸ்லாமிய



ISBN 978-955-627-120-1

கற்கைகள் துறையில் சார்ந்தவர்கள். ஆயினும் சாதாரணமாக ஈடுபாடு கொண்டோர்களில் சாதாரண பெரும்பான்மையினர் (52.4%) அரபுத் துறையைக் கற்பவர்கள்.

மிகப் பெரும்பான்மையான முஸ்லிம் மாணவியர் (72.2%) ஏனைய முஸ்லிம் மாணவியரிடையே த.ஃவா செய்வதாக குறிப்பிடும் அதேவேளை சிலர்(19%) முஸ்லிம், முஸ்லிம்-அல்லாத மாணவியரிடையேயும், வெகு சொற்பமானவர்கள்(6.3%) முஸ்லிம் அல்லாத மாணவியரிடையேயும் த.ஃவா ஈடுபாடுடையவர்கள். ஆண் மாணவர்களிடையே முஸ்லிம் மாணவியர் த.ஃவாவில் ஆர்வம் கொள்ளவில்லை போலுள்ளது.

வினாக்கொத்துக்கு பதிலளித்த மூன்றாம் கல்வியாண்டைச் சேர்ந்த மாணவியர்களில் பல்கலைக்கு அனுமதிக்கப்பட்ட முதலாம் கல்வியாண்டில் இருந்தே த.ஃவா ஈடுபாட்டை தொடங்கிவிட்டனர் என குறிப்பிடும் அதேவேளை நான்கில் ஒரு பகுதியினர் (25.3%) இரண்டாவது கல்வியாண்டிலும் அதை விடவும் குறைவானவர்கள் (20.3%) மூன்றாவது கல்வியாண்டிலும் த.ஃவாவில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். முதலாவது கல்வியாண்டில் த.ஃவாவை தொடங்கியவர்களில் மிகப் பெரும்பான்மையோர் (56.1%) அரபுத் துறையை சார்ந்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தின் மாணவியர் த.ஃவா பணியை மேற்கொள்ளும் வழிமுறைகளில் வேறுபடுகின்றனர். இன்றையச் சூழலமைவில் ஒரு உயர் கல்வி நிறுவனத்தில் த.ஃவாவுக்கான இலட்சியம் வேறுபடுவதற்கு அமைவாக த.ஃவா வழிமுறையும் மாறுபட்டு அமைவதுண்டு. இவ்வாறே த.ஃவாவினை கல்வி கலாசார செயற்பாட்டினூடாக முன்னெடுப்பதற்கான வாய்ப்பும் அதிகம். கல்வி பின்புலத்தை கொண்டோருடைய அறிவார்ந்த ரீதியிலான நடவடிக்கையினூடாக த.ஃவா செயற்பாட்டை முன்னெடுப்பது சாலப் பொருத்தமுடையதாகும். பல்கலைக் கழகம் அனுமதிக்கப்பட்டுள்ள முஸ்லிம், முஸ்லிம் அல்லாத மாணவர்களுக்கிடையிலான த.ஃவா வழிமுறையும் வேறுபட வாய்ப்புண்டு.

வினாக்கொத்துக்கு பதிலளித்த மாணவியரிடம் 60 வகையான த.ஃவா வழிமுறைகளில் அவர்களின் ஈடுபாடு பற்றிய பதில்கள் பெறப்பட்டன. ஒப்பீட்டு ரீதியில் மாணவியர் கீழ்காணும் அட்டவணை1 காண்பிக்கின்றவாறு குறித்த சில செயற்பாடுகளில் பெரிதும் அல்லது சாதாரணமாக ஈடுபாடு கொண்டுள்ளனர். இதன்படி த.ஃவா நோக்கில் கருத்தாடலை மேற்கொள்வோரின் எண்ணிக்கை வீதம் அதிகமாகும். இவ்வாறே தனிப்பட்ட ரீதியான த.ஃவா வழிமுறைகளில் இவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் போலுள்ளது. ஏனையோருக்கு முன்மாதிரியாகச் செயல்பட்டு த.ஃவா நோக்கிலான தனிப்பட்ட தொடர்பினையும் சாதாரணமாகப் பேணுகின்றனர். இந்த வகையில் சுகதுக்க விசாரணையில் ஈடுபடுதல், சமூக வலைத் தளங்களில் கருத்துப் பரிமாற்றம் செய்தல், இஸ்லாமிய கருத்துக்களை பதிவேற்றம் செய்தல், கல்வியில் பின் தங்கியவர்களுக்கு உதவுதல், விடுதி அறையில் தனிப்பட்ட மேசையில் த.ஃவா



ISBN 978-955-627-120-1

நூற்களை காட்சிப்படுத்துதல் போன்ற தனிப்பட்ட ரீதியான த.்.வா முறைமைகளில் ஈடுபாட்டை பதிலளித்தோர் தெரிவித்துள்ளனர்.

அட்டவணை1: மாணவியர் பெரும்பாலும் ஈடுபடும் த.்.வா வழிமுறைகள்

| இல | வழிமுறைகள் | பெரிதும் | சாதாரணம் | ஓரளவு |
|---|---|---|---|---|
| 01 | முன்மாதிரியாக நடத்தல். | 19.0% | 48.1% | 12.7% |
| 02 | தனிப்பட்ட தொடர்பு. | 11.4% | 40.5% | 19.0% |
| 03 | கருத்தாடல். | 11.4% | 44.3% | 19.0% |
| 04 | கருத்துக்களை சமர்ப்பித்தல். | 10.1% | 29.1% | 19.0% |
| 05 | சொற்பொழிவு நடத்தல். | 10.1% | 25.3% | 17.7% |
| 06 | குழு சந்திப்பு. | 15.2% | 32.9% | 15.2% |
| 07 | இஸ்லாமிய வகுப்பை ஏற்படுத்தல். | 10.1% | 29.1% | 8.9% |
| 09 | தேவையுடையோருக்கு நிதி வழங்கல். | 15.2% | 31.6% | 19.0% |
| 10 | த.்.லீம் வாசித்தல். | 20.3% | 15.2% | 11.4% |
| 11 | சுக துக்கம் விசாரித்தல். | 51.9% | 26.6% | 7.6% |
| 12 | விழிப்புணர்வு நிகழ்வுகளில் கலந்து கொள்ளல். | 20.3% | 32.9% | 8.9% |
| 13 | சமூக வலைத்தளங்களில் கருத்து பகிரல். | 24.1% | 22.8% | 13.9% |
| 14 | இஸ்லாமிய கருத்துக்கள், சொற்பொழிவுகளை பதிவேற்றல். | 29.1% | 27.8% | 8.9% |
| 15 | நன்கொடைகளை சேர்த்துக் கொடுத்தல். | 21.5% | 26.6% | 11.4% |
| 16 | இஸ்லாத்திற்கு எதிரான கருத்துக்களுக்கு எதிர்வாதம் புரிதல். | 20.3% | 20.3% | 19.0% |
| 17 | இஸ்லாமிய நடைமுறைக்கான செயன்முறை விளக்கமளித்தல். | 10.1% | 34.2% | 7.6% |
| 18 | கல்வியில் பின்தங்கியவர்களுக்கு உதவுதல். | 22.8% | 22.8% | 13.9% |
| 19 | மேசையில் த.்.வா நூல்களை வைத்திருத்தல். | 21.5% | 32.9% | 11.4% |

மூலம்: வினாக்கொத்து 2017

இவை தவிர இஸ்லாமிய இயக்கங்களுடன் இணைந்து த.்.வா செயற்பாட்டில் ஈடுபடல், விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், த.்.லீம் வாசித்தல், இஸ்லாமிய வகுப்புக்களை ஏற்படுத்துதல், சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தலும் நடாத்துதலும், குழு ரீதியான சந்திப்புக்கள் என கூட்டிணைவான செயற்பாடுகள் மூலமும் த.்.வாவில் ஈடுபாடு காணப்படுகிறது. ஆயினும் அவை சாதாரணமான அளவிலேயே பெரிதும் நடைபெறுகிறது. பல்கலைக்கழகச் சூழலில் மாணவியர் கல்வி ரீதியான செயற்பாடு ஊடான த.்.வா முன்னெடுப்புகக்களில் போதியளவு கவனம் செலுத்தவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கருத்தரங்குகள், ஆய்வரங்குகளை ஏற்படுத்துதல், ஆய்வுகளை சமர்ப்பித்தல், விவாதங்களை ஏற்படுத்துதலும், மேற்கொள்ளுதலும்,



ISBN 978-955-627-120-1

புத்தகக் கண்காட்சி, மென்தட்டு (CD) விநியோகம், மின்னஞ்சல் ரீதியான தொடர்பு, இஸ்லாமிய வலைதள உருவாக்கம் போன்ற செயற்பாடுகளில் மாணவியர்களின் குறைந்தளவான ஈடுபாட்டை கீழ்வரும் அட்டவணை2 காண்பிக்கிறது.

அட்டவணை2: மாணவியர் குறைந்தளவு ஈடுபடும் த.்.வா வழிமுறைகள்

| இல | வழிமுறைகள் | பெரிதும் | சாதாரணம் | ஓரளவு |
|---|---|---|---|---|
| 01 | கருத்தரங்குகள் | 5.1% | 13.9% | 30.4% |
| 02 | ஆய்வரங்கு ஏற்படுத்தல் | 6.3% | 16.5% | 13.9% |
| 03 | ஆய்வுகளை சமர்ப்பித்தல் | 2.5% | 20.3% | 15.2% |
| 04 | விவாதங்களை ஏற்படுத்தல் | 3.8% | 19.0% | 11.4% |
| 05 | புத்தகக் கண்காட்சி | 6.3% | 8.9% | 12.7% |
| 06 | மென்தட்டு (CD) விநியோகம் | 2.5% | 12.7% | 15.2% |
| 07 | மின்அஞ்சல் (Email) தொடர்பு | 10.1% | 16.5% | 8.9% |
| 08 | இஸ்லாமிய வலைத்தள உருவாக்கம் | 13.9% | 17.7% | 16.5% |

மூலம்: வினாக்கொத்து 2017

மாணவியர் பாரம்பரியமான த.்.வா முறைகளில் ஈடுபாட்டினை தெரிவித்துள்ளனர். ஆயினும் அவர்கள் பெற்றுள்ள கல்வியும் சிந்தனாத் திறனும் வேண்டி நிற்கும் ஆக்கத்திறன் சார்பான த.்.வா முறைகளில் பரிட்சயம் வெகுவாக குறைந்து காணப்படுவது நோக்கத்தக்கது. பதாதைகள், வாழ்த்து அட்டை, ஸ்டிக்கர் (Sticker), புத்தககுறிப்பான் (Book marker) விநியோகம், இலவச சிகிச்சை, இரத்த தானம், அறிக்கைப் பலகை, புத்தகக் கண்காட்சி போன்ற செயற்பாடுகளை மாணவர் ஈடுபாட்டை பின்வரும் அட்டவனை3 எடுத்துக்காட்டுவது தக்க சான்றாகும். மேற்சொன்ன முனைவுகள் நிதியோடு தொடர்பானதாக அமைந்திருப்பது ்மாணவியரின் குறைந்தளவிலான ஈடுபாட்டுக்கு வழிகோலி இருக்கலாம்.

அட்டவணை3: ஆக்கதிறன் சார் த.்.வா வழிமுறைகளில் மாணவியர் ஈடுபாடு

| இல | வழிமுறைகள் | பெரிதும் | சாதாரணம் | ஓரளவு |
|---|---|---|---|---|
| 01 | பதாகைகள் உருவாக்கம் | 2.5% | 11.4% | 11.4% |
| 02 | ஸ்டிக்கர் (Sticker), புத்தககுறிபான் (book marker) விநியோகம் | 7.6% | 11.4% | 12.7% |
| 03 | வாழ்த்து அட்டை | 7.6% | 7.6% | 15.2% |
| 04 | இலவச சிகிச்சை | 6.3% | 11.4% | 10.1% |
| 05 | இரத்த தானம் | 3.8% | 7.6% | 8.9% |
| 06 | அறிக்கைப் பலகை | 8.9% | 13.9% | 16.5% |
| 07 | புத்தக கண்காட்சி | 6.3% | 8.9% | 12.7% |

மூலம்: வினாக்கொத்து 2017



ISBN 978-955-627-120-1


வினாக்கொத்துக்கு பதிலளித்த மாணவியர் உட்புற(Indoor) த.ஃவா செயற்பாட்டில் காண்பிக்கும் ஆர்வத்தினை வெளிக்கள (Outdoor) த.ஃவா முறையில் கொண்டிருக்கவில்லை எனலாம். ஆயினும் பொதுக்கூட்டங்களை ஏற்படுத்துவதில் சாதாரண நிலையைக் கொண்டுள்ளனர். இவ்வாறே கலை கலாசார நிகழ்வுகளினூடாக த.ஃவாவை மேற்கொள்ளும் உபாயத்திலும் மாணவர்களின் ஆர்வம் வெளிப்படுத்தப்படவில்லை. நாடக அரங்கம், விவாத மேடை, இலக்கிய கருத்தரங்கு, வாழ்த்து அட்டை விநியோகம், விடுதி நிகழ்வுகள், மேடைப்பேச்சு, சர்வதேச விஷேட நாட்களின் நிகழ்வுகள் போன்றவற்றின் மாணவர்களின் குறைந்த வீத ஆர்வத்தையே தரவுகள் காண்பிக்கின்றன. பொதுவாக பாரம்பரிய முறைமைகளிலன்றி திறன்களும், திறமையும் வேண்டி நிற்கும் வழிமுறைகளில் ்மாணவியரின் கவனம் ஈர்க்கப்படவில்லை. ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்கள் த.ஃவாச் செயற்பாட்டுக்கான செயற்திறன்மிக்க தளங்கள். குறிப்பாக சமூக வலைத்தளங்கள் கருத்துப்பரிமாற்றத்துக்கும், விழிப்புணர்வுக்கும், கருத்தாக்கத்திற்கும் ஏற்புடைய ஊடகமாக தொழில்படுகின்றன. எனினும் அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள், சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்தி மாணவியரின் த.ஃவா முனைவுகள் குறிப்பிடத்தக்கதாக இல்லை. ஒப்பீட்டளவில் சமூக வலையத்தளங்களிலான கருத்துப்பரிமாற்றம் இடம்பெறுவது அதிக வீதத்தைக் கொண்டுள்ளது.

வினாக்கொத்துக்கு பதிலளித்த மாணவர்களின் த.ஃவா ஆர்வம் தூண்டப்படுவதற்கு சமூக மாற்றத்தில் அவர்கள் கொண்டிருக்கின்ற நாட்டமே முன்னோடியானதாகும் என்பதை கீழ்காணும் வரைபடம்1 காண்பிக்கின்றது. உறவினர்களுடைய தாக்கம், கூடிஇருப்போரின் தாக்கம், இயக்கத்துடனான தொடர்பு என்பன சில மாணவர்களை த.ஃவாச் செயற்பாட்டிற்கு தூண்டிவிட்டுள்ளன. இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடத்தின் பாடவிதானம் அதனைக் கற்கின்ற இவ்மாணவியர்களுக்கு த.ஃவா ஈடுபாட்டுக்கான தூண்டுதலை சிறிதளவானவருக்கு ஏற்படுத்தியுள்ளது. இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பாடவிதானத்தின் கற்கைகளின் உள்ளடக்கம் த.ஃவா சார்பான விடயங்களை கொண்டிருந்த போதிலும் மாணவர்கள் மீதான அதன் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக கொள்ள முடியவில்லை. தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் த.ஃவா இயக்கங்களின் செல்வாக்கினை சுமார் நான்கில் ஒரு பகுதி (24.1%) பெற்றுள்ளது.



ISBN 978-955-627-120-1

படம்1: த.்.வாவுக்கான தூண்டல்கள்




மூலம்: வினாக்கொத்து 2017

இலங்கை போன்று தென்கிழக்கு பல்கலைக்கழகம் பிரதானமான சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று சமூகப் பிரிவினர்களையும் கொண்டது. இப்பல்கலைக்கழகத்தில் பெரும்பாலான பீடங்களில் போதனா மொழியாக ஆங்கிலம் காணப்படுகிறது. ஆயினும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் அவரவரது தாய் மொழியான சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளை பெரிதும் பயன்படுத்துகின்றனர். வினாக்கொத்துக்கு பதிலளித்த மாணவியர் தமது த.்.வாவினை மிகப்பெரும்பான்மையினர் (97.5%) தமிழ் மொழியிலேயே அமைத்துக் கொண்டுள்ளனர். இருந்தபோதிலும் சிங்களமும் (45.6%) ஆங்கிலமும் (41.8%) த.்.வா மொழியாக கனிசமானோர் பயன்படுத்துகின்றனர். அரபு போன்ற வேறு மொழிகளிலும் த.்.வா நடைபெறுகிறது.

இவ்மாணவியர் த.்.வா பணியில் எதிர் கொள்ளும் தடைகள் பற்றிய விபரங்களை தந்துள்ளனர். கீழ்காணும் அட்டவனை4 காண்பிப்பது போல மாணவர்கள் மீதான வேலைப்பளுவே பிரதான தடையாக பெரும்பான்மையானோர் (55.7%) கருதுகின்றனர். இவ்வாறு கருதும் மாணவர்களுள் பெரும்பான்மையினர் (56.8%) அரபுக் கற்கையையும், ஏனையோர் இஸ்லாமிய கற்கையையும் பயில்பவர்கள். மேலும், த.்.வா பற்றிய அனுபவமின்மை கிட்டத்தட்ட அரைவாசிக்குக் குறைவானவர்களிடம் (45.6%) த.்.வா ஈடுபாட்டிற்கான தடையாக அமைந்துள்ளது. த.்.வா பற்றிய அனுபவமின்மை பெரும்பாலும் (58.3%) இஸ்லாமிய கற்கையை மேற்கொள்பவரிடம் காணப்படுகிறது. ஓப்பீட்டளவில் அரபுக்கற்கையை மேற்கொள்பவர்களில் (48.7%) த.்.வா அனுபவமற்றவர்கள். இவர்களுள் அதிகமானவர்கள் அரபுக் கலாபீடங்களில் பட்டம் பெற்றவர்கள் என்பதால் த.்.வா அனுபவம் அந்நிறுவனங்களில் பெற்றிருப்பார்கள் எனக் கருத இடமுண்டு. மேலும் சுமார் அரைவாசிப் பேருக்கு (48.1%) சக மாணவர்களின் ஒத்துழைப்பின்மை தடையாக அமைந்துள்ளது. இவ்வாறே மிகக் கனிசமானோருக்கு (38%) வளப்பற்றாக்குறையும் கனிசமானோருக்கு சக மாணவர்களின் பரிகாசமும் கிட்டத்தட்ட அதே அளவானவர்களுக்கு நிதிப்



ISBN 978-955-627-120-1

பற்றாக்குறையும் த.்.வாவுக்கான தடையாக உள்ளது. பல்கலைக்கழகத்தின் சட்டதிட்டம் த.்.வா ஈடுபாட்டிற்கான தடையாக சிலரே (19%) கருதுகின்றனர்.

அட்டவணை4: த.்.வாவின் தடைகள்

| **தொடர் இல** | **தடைகள்** | **வீதம்** |
|---|---|---|
| 01 | பல்கலைக்கழகத்தின் சட்டதிட்டங்கள் | 19.0 |
| 02 | விடுதியின் ஒழுக்கக் கோவைகள் | 17.7 |
| 03 | சக மாணவர்களின் பரிகாசம் | 30.4 |
| 04 | சக மாணவர்களின் எதிர்ப்பு | 16.5 |
| 05 | வேலைப்பளு | 55.7 |
| 06 | அனுபவமின்மை | 45.6 |
| 07 | மொழிப்புலமையின்மை | 30.4 |
| 08 | நிதியின்மை | 27.8 |
| 09 | சக மாணவர்களின் ஒத்துழைப்பின்மை | 48.1 |
| 10 | அறிவின்மை | 10.1 |
| 11 | வளங்கள் போதாமை | 38 |

மூலம்: வினாக்கொத்து 2017

## 5. முடிவுரை

தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மூன்றாம் வருட விடுதி மாணவியர் பொதுவாக த.்.வாவில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டுள்ளனர். முஸ்லிம் மாணவிகளிடையே பெரிதும் இடம்பெறும் இவர்களது த.்.வா பல்வேறு வழிமுறைகளில் மேற்கொள்ளப்படுகிறது. ஆயினும் அது பாரம்பரிய ரீதியான வழிமுறைகளிலே மேலோங்கிக் காணப்படுகிறது. அறிவார்ந்த, திறன் சார்பான, ஆக்கபூர்வமான வழிமுறைகளின் பயன்பாடு ஒப்பீட்டு ரீதியில் குறைவானது. குழு, கூட்டுச்செயற்பாட்டை விட தனிநபர் நடவடிக்கைகளே த.வா பெரிதும் மேற்கொள்ளப்படுகிறது. சமூகவலைத்தளங்களை தவிர்த்து த.்.வாவுக்காக அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் பயன்படுத்தப்படுவது குறைவாக உள்ளது.

## உசாத்துணைகள்

Ahmad, A. (1984). *Muslim Women and Higher Education: A case for separate institutions for women* (Vol. 59): Institute of Policy Studies.

Anwar, M. 'We Can Do Preaching [Dakwah] Over the Phone': the use of mobile phones on women micro-entrepreneurs in an Indonesian religious community.

Arnez, M. (2009). Dakwah by the Pen: Reading Helvy Tiana Rosa's Bukavu. *Indonesia and the Malay World, 37*(107), 45-64.



ISBN 978-955-627-120-1

Cooke, M. (2001). Women Claim Islam. *New York and London: Routledge*.

Lemu, B. A. (2001). *Women in Da;wah*. Minna, Nigeria: Islamic Education Trust.

Poston, L. (1993). Islamic Da'wah in the West. *Theological Studies, 54*(1), 193.

Solihin, S. M. (2008). *Islamic Da'wah: Theory and practice*: International Islamic University Malaysia Kuala Lumpur.

الشيخة, و. منهج الدعوة الاسلامية في ضوء التحديات المعاصرة وآفاقها Université El Hadj Lakhdar de Batna 1.

القاسم, ع. (2010). 183وسيلة دعوية للمرأة المسلمة.

حبيبة, ش. منهج الدعوة الاسلامية في استثمار الطاقة والامكانيات البشرية Université Benyoucef Benkhedda Alger 1.

شبيب, ن. م. (2013). مساهمة الصحابيات من الأنصار في الدعوة ورواية الحديث النبوي الشريف .



ISBN 978-955-627-120-1

View publication stats